**வரையறுக்கப்பட்ட சதொச பாதுகாப்பு மற்றும் பொது (தனியார்) கம்பனியின் – 2023/2024 கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை**

---

சதொச பாதுகாப்பு மற்றும் பொது (தனியார்) கம்பனியின் 2023 மற்றும் 2024 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டுகளின் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் மாத்திரம் எனது இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2022/2023 மற்றும் 2023/2024 ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரித்த 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| சொத்துக்கள் | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 26,373,934 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 92,777,289 |
| | -------------------- |
| **மொத்த சொத்துக்கள்** | **119,151,223** |
| | =========== |
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | 45,202,102 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 16,899,627 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 57,049,494 |
| | ------------------- |
| **மொத்த பொறுப்புக்கள்** | **73,949,121** |
| **மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **119,151,223** |
| | =========== |
| மொத்த வருமானம் | 249,765,956 |
| மொத்த செலவினம் | 255,037,172 |
| | ------------------ |
| **வரிக்கு முன் இலாபம் / (நட்டம்)** | **(5,271,216)** |
| | ========== |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்புடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2.3 ஆம் பிரிவு | 2022/2023 மற்றும் 2023/2024 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். எங்களால் எதிர்வரும் ஆண்டிற்காக தயாரிக்கப்படும். | வழிகாட்டியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 4.4 ஆம் பிரிவு | கம்பனி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்திருக்கவில்லை. | எங்களால் எதிர் காலத்தில் உள்ளகக் கணக்காய்வளர் ஒருவர் நியமிக்கப்ப டுவார். | உள்ளகக் கணக்காய்வாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கா ன செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) | 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | கம்பனிக்காக பதவியணியினர் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | எங்களால் பதவியணியினர் தயாரிக்கப்படு கின்றது. சதொசயிலிருந்து இன்னும் அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. | பதவியணியினர் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 6.7 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்களுக் கான வருடாந்த சொத்து மெய்மை ஆய்வு மேற்கொள் ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் சொத்துக்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | 7.5 ஆம் பிரிவு | மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை வரிசை அமைச்சிற்கும், பொதுத் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் பாதுகாப்பு சேவை வழங்கிய நிறுவனம் ஒன்றான ஜா-எல சதொச மெகா ஸ்ரோர்ஸில் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 4,852,622 பணம் களவு போய் இருந்தது. எந்தவொரு விசாரணையும் இன்றி கம்பனி பொறுப்புவாய்ந்த தரப்பினராக பெயர் குறிப்பிட்டு நட்டத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த தொகையில் ரூபா 2.4 மில்லியன் லங்கா சதொச கம்பனியால் பாதுகாப்பு கட்டணங்களில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. | அது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது . | ஈடுசெய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நாடு முழுவதையும் மேவுகை செய்வதற்காக கம்பனியால் 12 பிராந்திய முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டதுடன் அவர்களின் நியமனம், செயலாற்றல் மற்றும் வருகை மீளாய்வு செய்வதற்காக சரியான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற் காக எங்களால் சில உள்ளகக் கட்டுப்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | உரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்றை அறிமுகப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்குரிய கட்டிடமொன்றில் இக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனினும் 2024 ஆம் ஆண்டிற்காக கட்டிடத்திற்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | எங்களுக்கு சதொச தரப்பினரிடமிருந்து வாடகை உடன்படிக்கை கிடைத்திருக்க வில்லை. | கட்டிடத்திற்காக வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரித்து ஆகக் குறைந்தது மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளை பட்டியலிடவேண்டியிருந்ததுடன் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் காலரீதியில் நாளதுவரையாக்குதல் வேண்டும். எனினும் அவ்வாறான விடயங்களை உள்ளடக்கி பெறுகைத் திட்டமொன்று 2022/2023 மற்றும் 2023/2024 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டுக் கொள்வதுடன் எதிர் காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 33 ஆக இருந்ததுடன் அதில் அமைய அடிப்படையில் 05 நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்டுக் கொள்கின்றோம். எங்களது கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படாமை இதற்கு காரணமாகும். | பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அமைப்பிற்குரிய சகல நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையிலாக இருக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் என்பவற்றை அறிமுகப்படுத்தாதிருந்ததுடன் சரியான தரவுகளுக்கான நுழைவும் காணப்படவில்லை. பௌதீக வள முகாமைத்துவ முறைமையும் 2023 ஆம் ஆண்டு வரையிலும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |